www.Padasalai.Net www.TrbTnpsc.com

RS2

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

12 – ஆம் வகுப்பு

## உயிரியல்

காலம் : 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள் : 70

### பகுதி – I உயிரி–தாவரவியல் பிரிவு –I மதிப்பெண்கள்: 35

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையையும் சேர்த்து எழுதவும்.

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும். 8 x 1 = 8

1. மரபுக்குரியன் AGC ஆனது AGA வாக மாற்றம் அடையும் நிகழ்வு
(அ) தவறுதலாக பொருள்படும் சடுதி மாற்றம் (ஆ) பொருள் உணர்த்தாத சடுதி மாற்றம்
(இ) கட்ட நகர்வு சடுதி மாற்றம் (ஈ) நீக்குதல் சடுதி மாற்றம்
2. ஊடுகடத்தும் திசு காணப்படுவது (அ) சூலின் சூல்துளைப்பகுதி
(ஆ) மகரந்தச்சுவர் (இ) சூலகத்தின் சூலகத் தண்டு பகுதி (ஈ) சூலுறை
3. எத்திடியம் புரோமைடு எந்த தொழில் நுட்ப முறையில் பயன்படுத்தப்படுகிறது?
(அ) சதர்ன் ஒற்றிஎடுப்பு தொழில்நுட்ப முறை
(ஆ) வெஸ்டர்ன் ஒற்றி எடுப்பு தொழில்நுட்ப முறை
(இ) பாலிமரேஸ் சங்கிலித் தொடர்வினை (ஈ) அகோரஸ் இழும மின்னாற் பிரிப்பு
4. ஒட்டிக்கொள்ளும் சுரப்பி தூவிகளைக் கொண்டுள்ள போயர்க்ஹாவியா மற்றும் கிளியோம் இவற்றிற்கு உதவி செய்கிறது
(அ) காற்று மூலம் விதை பரவுதல் (ஆ) விலங்குகள் மூலம் விதை பரவுதல்
(இ) தன்னிச்சையாக விதை பரவுதல். (ஈ) நீர் மூலம் விதை பரவுதல்
5. கீழ்கண்டவற்றில் எது சிதைவு செயல்முறைகள் அல்ல.
(அ) வடிதல் (ஆ) சிதைமாற்றம் (இ) வளர்மாற்றம் (ஈ) துணுக்காதல்
6. தோல் புற்று நோயை அதிகரிக்கும் நிகழ்வு எந்த வளிமண்டல வாயு குறைவு காரணமாக ஏற்படுகிறது? (அ) அம்மோனியா (ஆ) மீத்தேன். (இ) நைட்ரஸ் ஆக்சைடு (ஈ) ஓசோன்
7. ஜெயா மற்றும் ரத்னா கீழ்கண்ட எந்த அரைக்குட்டை இரகத்திலிருந்து பெறப்பட்டன.
(அ) கோதுமை (ஆ) நெல் (இ) காராமணி (ஈ) கடுகு
8. செயலாக்க மூல மருந்து டிரான்ஸ் டெட்ராஹைட்ரோ கென்னாபினா எதில் உள்ளது
(அ) அபின் (ஆ) மஞ்சள் (இ) கஞ்சாச்செடி (ஈ) நிலவேம்பு

### பிரிவு –II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 x 2 = 8

9. கருவுறாக் கனியாதல் குறிப்பு எழுதுக.
10. தவறுதலாகப் பொருள் படும், பொருள் உணர்த்தாத சடுதி மாற்றத்திற்கு இடையே உள்ள வேறுபாடு என்ன.
11. மரபணு மாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் வேதிப்பொருளின் பெயர்களை கூறுக.
12. விதைப்பந்து என்றால் என்ன?
13. சோதனைக் கலப்பு என்றால் என்ன?
14. கலப்பின வீரியம் குறிப்பு வரைக.

### பிரிவு –III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 3 X 3 = 9

15. சோற்றுக் கற்றாழையின் ஒப்பனை பயன்பாட்டை எழுதுக.
16. கான்தரோ..பில்லி என்றால் என்ன?
17. உறை குளிர் பாதுகாப்பு பற்றி விளக்குக.
18. ஆற்றல் பிரமிட் எப்பொழுதும் நேரானவை காரணம் கூறுக.
19. சூலின் நீள் வெட்டு தோற்றம் படம் வரைந்து பாகங்கள் குறி.

### பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2 x 5 = 10

20. (அ) முழுமையற்ற ஓங்குத் தன்மை உதாரணத்துடன் விளக்குக. (அல்லது)
(ஆ) சிறுதானியங்கள் என்றால் என்ன? அதனுடைய வகைகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.
21. (அ) பூச்சி மகரந்தச் சேர்க்கை மலர்களில் காணப்படும் சிறப்பு இயல்புகளை குறிப்பிடுக.
(அல்லது) (ஆ) தாவரத் திசு வளர்ப்பின் பயன்பாடுகளை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி – I (உயிரியல் – விலங்கியல்)

(8 x 1 = 8)

I. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1) ஒரு உயிரியின் பிறப்பிற்கும் இனப்பெருக்க முதிர்ச்சிக்கும் இடைப்பட்ட வளர்ச்சிக் காலம் ----- எனப்படும். அ) இளம் உயிரி நிலை
ஆ) இனப் பெருக்க நிலை இ) முதிர்ச்சி நிலை ஈ) முதுமை நிலை

2) சீம்பாலில் குறைவாக காணப்படுவது அ) IgE ஆ) IgA இ) வைட்டமின்A ஈ) லாக்டோஸ்

3) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைப் படித்து சரியானதை தேர்வு செய்க
கூற்று அ: இரப்பரால் செய்யப்பட்ட திரைச் சவ்வுகள் கருப்பைவாய் மூடிகள் மற்றும் மறைப்புத் திரைகள் போன்றவை பெண் இனப் பெருக்கப் பாதையில் கருப்பை வாயினை கலவிக்கு முன் மூடப் பயன்படுகின்றன.
கூற்று ஆ: மேற்கூறிய அனைத்தும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய வேதிப் பொருள் தடுப்புகள் ஆகும்.
அ) கூற்றுகள் அ மற்றும் ஆ சரியே, மேலும், கூற்று ஆ கூற்று அ விற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றுகள் அ மற்றும் ஆ சரியே, ஆனால், கூற்று ஆ கூற்று அ விற்கான சரியான விளக்கமில்லை.
இ) கூற்று அ சரி ஆனால் கூற்று ஆ தவறு ஈ) கூற்றுகள் அ மற்றும் ஆ இரண்டுமே தவறானவை

4) நவீன உலகத்தின் குரங்கு எது?
அ) சிம்பான்சி ஆ) பிளாட்டிரைனா இ) கிப்பன் ஈ) உராங்குட்டான்

5) சரியாக பொருந்திய இணையைத் தேர்ந்தெடு
அ) ஆம்ஃபிடமைன்கள் - கிளர்வூட்டி ஆ) லைசர்ஜிக் அமிலம் டைஎத்திலமைடு - போதை மருந்து
இ) ஹெராயின் - உளவியல் மருந்து ஈ) பென்சோடைஅசபைன் - வலி நீக்கி

6) எம்மருந்து "மருந்துகளின் ராணி" என்று அழைக்கப்படுகிறது?
அ) டெட்ராசைக்கிளின் ஆ) எரித்ரோமைசின் இ) பெனிசிலின் ஈ) குளோரோமைசிடின்

7) பாலிமரேஸ் சங்கிலி வினை வெப்பநிலைமாறுபாட்டால் 3 தனித்தனி நிலைகளில் தொடர்கின்றது. அதன் வரிசை அ) இயல்பு திரிபு, இணைப்பு இழைபதப்படுத்துதல், உற்பத்தி
ஆ) உற்பத்தி, இணைப்பு, இயல்புதிரிபு இ) இணைப்பு, உற்பத்தி, இயல்புதிரிபு
ஈ) செயலிழப்பு, இயல்புதிரிபு, இணைப்பு

8) பின்வரும் மண்டலங்களில் அதிகபட்ச பல்வகைத் தன்மை கொண்ட பகுதி எது?
அ) குளிர் பாலைவனம் ஆ) வெப்ப மண்டலகாடுகள் இ) மிதவெப்ப மழைக்காடுகள் ஈ) சதுப்பு நிலங்கள்

(4 x 2 = 8)

II. **எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.**

9) வேறுபடுத்துக – வெளிகருவுருதல், உட்கருவுருதல்.

10) ஓபரான்கள் என்றால் என்ன? எ.கோலையில் எத்தனை ஓபரான்கள் உள்ளன?

11) இம்யுனோ குளோபுலினின் பணிகள் யாது?

12) மரபணு சிகிச்சை என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறு?

13) புதிய சூழலுக்கு இணங்கல் என்றால் என்ன?

14) அமேசான் காடுகள் பூமிக்கோளின் நுரையீரலாக கருதப்படுகிறது" – இந்த சொற்றொடரை நியாயப்படுத்து.

III. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வி.எண்.19 கட்டாய வினா.** (3 x 3 = 9)

15) வளர்ச்சி வளைவுகளை வேறுபடுத்துக.

16) கிராமப்புற பகுதிகளில் உயிரிய வாயு உற்பத்தி நிலையங்களின் பயன்களை வரிசைப்படுத்துக.

17) குறிப்பெழுதுக (i) சீசாகழுத்து விளைவு (ii) நிறுவனர் விளைவு

18) டவுன் சிண்ட்ரோம் உருவாக காரணம் என்ன?

19) லிம்ஃபோ கிரானுலோமா வெனரியம் ஒரு பால்வினைத் தொற்று நோய், அதனை தடுக்கும் முறைகளை எழுதுக.

IV **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** (2 x 5 = 10)

20) அண்ட செல்லின் அமைப்பைத் தகுந்த வரைபடத்துடன் விவரி. **(அல்லது)**
மனித மரபணு தொகுதித் திட்டத்தின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக.

21) ஒரு மனிதனின் உடலில் நுழைந்த பிறகு, எச்.ஐ.வி.ரெட்ரோ வைரஸ் இரட்டிப்படையும் செயல் முறையை விவரி. **(அல்லது)** நீர் மாசுபாட்டின் விளைவுகள் யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com